**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்**

**அ.வ.எண்.600/2023**

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 18-ம் நாள் செவ்வாய்கிழமை **வா.சா.1**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சிவக்குமார் | தொழில் | |
| த/பெ | : கந்தசாமி | கிராமம் | |
| வயது | : | தாலுகா | |
| | : | மாவட்டம் | |

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**

**1-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் பிஏ கூட்டுறவு படித்துள்ளேன். நான் தற்போது தாராபுரம் கூட்டுறவு வங்கியில் செயலராக பணியாற்றி வருகிறேன். என்னுடைய அப்பா தற்போது உயிரோடு இருக்கிறார். என்னுடைய அம்மா பெயர் குப்பாத்தாள். நான் ஆறு வயதாக இருக்கும் போது என்னுடைய தாயார் இறந்து விட்டார்கள். தாவா சொத்து என்னுடைய தாத்தாவின் பூர்வீக சொத்தாகும் அது 09.06.1973 ஆம் வருடம் பாகப்பிரிவினை செய்யப்பட்டு என்னுடைய தாத்தாவுக்கு ஒதுக்கப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எதிலும் என்னுடைய பெற்றோரின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். என்னுடைய தாயார் இறந்த பிறகு என்னுடைய தாத்தா வீட்டில் வளர்ந்தேன். என்னுடைய தாயார் இறப்புக்கு பிறகு நான் 1-ம் பிரதிவாதியின் வீட்டில் தான் வளர்ந்தேன் என்று சொன்னால் சரியல்ல. 1-ம் பிரதிவாதி எனக்கு பாதுகாவலராக இருந்து என்னை வளர்த்து படிக்க வைத்தார் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு 1996 ஆம் வருடம் திருமணம் நடந்தது. அப்போது என்னுடைய தாத்தா உயிரோடு இல்லை. நான் இந்த வழக்கில்என்னை என்னுடைய தாத்தா தான் வளர்த்தார் என்றும் 1-ம் பிரதிவாதி வளர்க்கவில்லை என்றும் பொய்யாக குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

2. திருமணத்தின் போது 1-ம் பிரதிவாதி தான் எனக்கு சுமார் 2 லட்சம் செலவு செய்தார் என்று சொன்னால் சரியல்ல. 1-ம் பிரதிவாதி விவசாய வேலை செய்து வருகிறார். தாவா சொத்துக்கள் அனைத்தும் 1-ம் பிரதிவாதியின் சுய சம்பாத்திய சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய தாத்தாவின் வாரிசு சான்றிதழ் குறித்து வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் விசாரணை நடந்தது. அதில் ரத்தினசாமி என்பவர் என்னுடைய தாத்தாவின் வாரிசு என குறிப்பிட்டு சான்று வழங்கப்பட்டது அதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டில் என்னுடைய அம்மாவின் பெயரும் வாரிசு சான்றில் சேர்த்து எனக்கு சான்று வழங்கப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்திலும் 1-ம் பிரதிவாதியின் பெயர்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். 1-ம் பிரதிவாதி சட்டத்துக்கு புறம்பாக வாரிசு சான்றிதழ் பெற்றதாக நான் ஏதேனும் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை.

**பிரதிவாதி தரப்பில் காலஅவகாசம் கோரி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.11.18 19:18:04 +0530

3-ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.